செய்வதற்கு பழக்கம் ஏற்படுவதோடு அவைகளையே சாப்பிடவும் வசதி ஏற்படுகிறது. அதனுல் காய் கரிகளை உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்வதோடு கமிட்டிகளும், மானேஜ்மெண்டுகளும் இந்த வேலையில் ஈடுபடுவதற்கு சர்க்கார் கவனம் செலுத்துவார்களா ? அதற்கு வேண்டிய முயற்சியையும் மந்திரி அவர்கள் எடுத்துக் கொள்வார்களா ?"

THE HON. SRI B. PARAMESWARAN :—" அநேக ஆஸ்டல்களில் இப்படி தோட்ட வேலைகள் செய்து வருகிறுர்கள். அங்கு உற்பத்தியாகும் பொருள்களையும் அவர்கள் சமயலுக்கு உபயோகப் படுத்திக் கொள்ளுகிறுர்கள். ரூ. 15 மாணவர்களுக்குக் கொடுப்பது அதிகமாக இருக்கிறது என்று அரசாங்கத்திற்குத் தகவல் வந்திருக்கிறது. அதைக் குறைக்கலாமா என்று அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது."

SRI S. SWAYAMPRAKASAM :—" From the answers given by the Hon. Minister, it is found that 200 hostels are run by private individuals. May I know whether the Government have got figures as to how many of them are run by Harijans and how many of them are run by non-Harijans? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" I have no figures. The intention of the Government is to see that committees are constituted comprising both Harijans and non-Harijans and there will be six members in each committee, three to be nominated by the Government and three to be nominated by the management. I am not sure how many of these hostels are run by Harijans, but I think most of them are managed by non-Harijans."

9–20 a.m. SRI V. MUTHU :—" ஹரிஜன ஹாஸ்டல்கள் நல்ல முறையில் நடக்கவில்லை என்ற புகார்கள் வருகிறதாகத் தெரிகிறது. என்னென்ன புகார்கள் வருகின்றன என்பது கனம் அங்கத்தினர்களுக்கு தெரிந்தால் அவர்கள் அந்த ஹாஸ்டல்களுக்கு விஜயம் செய்யும்போது அது மாதிரியான குறைகள் வரக்கூடாது எனச் சொல்லமுடியும். மதுரை ஜில்லாவில் ஹரிஜன சேவா சங்கத்தின் சார்பிலே 18 ஹாஸ்டல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அவை எல்லாம் நல்ல முறையில் நடந்து வருகின்றன என்பது கனம் மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" மதுரை ஜில்லாவில் இருக்கும் ஹாஸ்டல்கள் நல்ல முறையில் நடக்கின்றன என்பதும், மற்ற ஹாஸ்டல்களுக்கு அவை வழி காட்டியாகவும் இருக்கின்றன என்பதும் எனக்குத் தெரியும். எப்போதும் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ஹாஸ்டல்களுக்குச் சென்று பார்வையிட வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு ஹாஸ்டல்களிலுள்ள குறைபாடுகளைப் பரிசீலனை செய்து சர்க்காருக்கும் எடுத்துச் சொன்னுல் அவற்றை நிவர்த்திக்க சர்க்காருக்குச் சௌகர்யமாக இருக்கும்."

Development Schemes in Coimbatore district

* 1628 *Q.*—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the amounts allotted for Rural Development Schemes, Block Development Schemes and Community Project Schemes in Coimbatore district in 1953–54 ; and

(*b*) the amount spent for each item during the same year?

26th March 1955]

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" (*a*) The amounts allotted in 1953–54 are as follows :—

	Amount. RS.
(1) Rural Development Scheme (Local Development Works Scheme).	2,36,900
(2) Block Development Scheme—there were two National Extension Service Blocks (Tiruppur and Kangayam) in the district in 1953–54 (National Extension Service Schemes)—	
Other than loans	89,230
Loans	4,000
Total ..	93,230
(3) Community Projects Scheme (Lower Bhavani Project)—	
Other than loans	7,17,310
Loans	2,00,000
Total ..	9,17,310

" (*b*) The amounts spent in 1953–54 are as follows :—

	Amount. RS.
(1) Rural Development Scheme (Local Development Scheme).	Nil.
(2) Block Development Schemes (National Extension Service Schemes)—	
Other than loans	83,176
Loans	4,000
Total ..	87,176
(3) Community Projects Scheme—	
Other than loans	2,07,442
Loans spent	1,72,900
Total ..	3,80,342 "

SRI N. K. PALANISAMY :—" இம்மாதிரியாக 'ப்ளாக் டெவலப்மெண்டு ஸ்கீம், கம்யூனிடி ப்ராஜெக்ட் ஸ்கீம், ரூரல் டெவலப்மெண்டு ஸ்கீம்' என்று திட்டங்கள் போடுவதில் ரூரல் டெவலப்மெண்டு ஸ்கீம்களுக்கு எஸ்டாபிளிஷ்மெண்டு செலவு மிகவும் குறைவாக இருக்கிறது. ஆனால் ப்ளாக் டெவலெப்மெண்டு ஸ்கீம்களுக்கு அதிகச் செலவாகிறது. ஆகவே அதிகமாக ரூரல் டெவலப்மெண்டு ஸ்கீம்களையே எடுத்து

நடத்தவும், மேலும் இந்த மாதிரியாக திட்டங்கள் போடும்போது அந்தந்தப் பிரதேச மக்களையே கலந்து கொண்டு அவர்களுடைய யோசனைகளின் பேரிலேயே எல்லாத் திட்டங்களைப் போடவும் சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ? ”

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—“ மூன்று திட்டங்களுக்கும் ஒன்றுக்கொன்று வித்தியாசம் இருக்கிறது. ஒவ்வொன்றுக்கும் ஏற்றபடி ஸ்டாப் நியமிக்கப்பட்டிருக்கிறதே தவிர அனாவசியமாக எங்கும் ஸ்டாப் நியமிக்கப்படவில்லை. இந்தத் திட்டங்கள் எல்லாம் அந்தந்தப் பிரதேச மக்களைக் கலந்து கொண்டே தான் உருவாக்கப்படுகிறது.”

SRI K. R. NALLASIVAM :—“ கம்யூனிடி ப்ராஜெக்ட் பிரதேசங்களுக்கு 9 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டதில் சுமார் மூன்று லட்சம் ரூபாய் தான் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் ஜனங்களுடைய ஒத்துழைப்பு அந்தப் பிரதேசங்களில் கிடைக்காததா ? அல்லது சர்க்காருடைய கொள்கையில் தெளிவு இல்லாததா ? ”

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—‘‘ இது 1953–54–ம் வருஷத்தைப் பற்றியது. இந்த ஸ்கீமை ஆரம்பிப்பதற்கு முன் முதலில் சில பூர்வாங்க வேலைகள் நடக்க வேண்டியிருந்தது. அதனால் தான் அந்த வருஷத்தில் அதிகப்படியாகச் செலவாகவில்லை. ஆனால் இந்த வருஷத்தில் அதிகப்படியாக செலவும் ஆகிவருகிறது. இந்தப் பிரதேசமே மற்றவற்றிற்கு எல்லாம் முதன்மையானதாக இருக்கும் அளவில் மிகவும் நன்றாக வேலை நடந்து வருகிறது என்பதை கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.”

MR. SPEAKER :—‘‘ We have five minutes more and I want to finish all the questions.’’

Village Vaidyas

* 1629 *Q.*—SRI K. C. GOPALAN UNNI : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Village Vaidya Scheme is still in force;

(*b*) if so, how many Vaidyas were trained in 1953 and 1954 and how many of them were from Malabar ; and

(*c*) which are the centres that give training under the scheme?

THE HON. SRI A. B. SHETTY :—‘‘ (*a*) Yes, Sir.

‘‘ (*b*) 124 Village Vaidyas were trained in 1953 and 1954. Eight of them belong to Malabar district.

‘‘ (*c*) The only centre giving training to the Village Vaidyas in the Madras State is located at the College and Hospital of Indigenous Medicine, Madras.’’

SRI T. C. NARAYANAN NAMBIAR :—‘‘ Will the Government be pleased to reconsider the question of re-opening the Village Vaidya training centre which was in the West Coast in the near future? ’’

THE HON. SRI A. B. SHETTY :—‘‘ There is no demand, Sir. Very few are coming for training.’’